# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:-14** **தேதி:-19.05.2010**

## தோழர் மோனி போஸ் மறைந்தார்

அன்பார்ந்த தோழர்களே,

தபால் தந்தி இயக்கத்தின் முது பெரும் தலைவரான தோழர் மோனி போஸ் இன்று (19.05.2010) காலை 10.45 மணியளவில் காலமானார் என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். மிகவும் கடுமையான காய்ச்சலால் அவதிப்பட்ட அவர், கொல்கொத்தாவில் ஒரு மருத்துவ மனையில் ஒரு மாத காலத்திற்கு முன் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை எடுத்து வந்தார். திருவனந்த புரத்தில் நடைபெற்ற அகில இந்திய மாநாட்டில் இத் தகவலை அறிந்த தமிழ் மாநிலச் சங்கம் அவரது மருத்துவ சிகிச்சைக்காக ரூ.10,000/- வழங்கியது. இதே போல பல மாநிலச் சங்கங்களும், மாவட்டச் சங்கங்களும், தனி நபர்களும் தோழர் மோனியின் சிகிச்சைக்காக பண உதவி செய்தனர். ஆனால் சிகிச்சை பலனின்றி தோழர் இறந்தது என்பது நமது இயக்கத்திற்கு ஒரு பேரிழப்பு. அவரது பிரிவால் வாடும் அவரது குடும்பத்திற்கு தமிழ் மாநிலச் சங்கம் தனது ஆழ்ந்த அனுதாபத்தை உரித்தாக்குகிறது.

1927ஆம் வருடம் மே மாதத்தில் வங்காள தேசத்தில் உள்ள ஒரு சிறு கிராமத்தில் பிறந்தார் தோழர் மோனி கோபால் தாஸ். மற்ற குடும்பங்களைப் போலவே அவரது குடும்பமும் கொல்கொத்தாவில் குடியேறினர். அவரது தந்தையார் விரைவிலேயே காலமானதால் அவரும் அவரது அண்ணனும், தபால் தந்தி தொழிற்சங்க இயக்கத்தின் பிதாமகர்களில் ஒருவருமான தோழர் KG போஸும் மிகக் கொடிய வறுமையில் உழன்றனர். பின்னர் இருவரும் தபால் தந்தி பணிக்கு தேர்வாகி, கொல்கொத்தா DET அலுவலகத்தில் எழுத்தர்களாக பணிக்கு சேர்ந்தனர். 25.08.1945ல் எழுத்தராக பணியில் சேர்ந்த தோழர் மோனி போஸ் 1947ல் நடைபெறுவதாக இருந்த தபால் தந்தி ஊழியர்களின் வேலை நிறுத்தத்திற்காக அவருடைய சகோதரருடன் இணைந்து பிரச்சாரத்தில் ஈடுபட்டதால் 1949ல் பணியில் இருந்து டிஸ்மிஸ் செய்யப்பட்டார். பணி நீக்கம் செய்யபட்ட அந்த இருவரும் மீண்டும் இலாகாவில் பணிக்கு எடுத்துக் கொள்ளப்படவே இல்லை.

தோழர் மோனி போஸ் பின்னர் Indian Oxygen Ltd., ல் பணிக்கு சேர்ந்தார். தபால் தந்தி இலாகாவிலிருந்து அவர் பணி நீக்கம் செய்யப்பட்டாலும், தபால் தந்தி தொழிற்சங்க இயக்கத்தில் இருந்த சீர்திருத்த வாத தலைமையை எதிர்த்து அந்த இயக்கத்தில் தொடர்ந்து பணியாற்றி வந்தார்.

தொடர்ந்து நாற்பது ஆண்டுகளாக E3 சங்கத்தில் பொதுச் செயலராக பணியாற்றி வந்த தோழர் OP குப்தாவை 1991இல் போபாலில் நடைபெற்ற அகில இந்திய மாநாட்டில் தோற்கடித்து E3 சங்கத்தின் பொதுச் செயலராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1994ல் திருவனந்த புரத்தில் நடைபெற்ற அகில இந்திய மாநாட்டில் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு செயல் பட்டு வந்தார்.

தொலைதொடர்பு இலாகா BSNL என்று பொதுத்துறை நிறுவனமாக மாற்றப்பட்ட பின் 2001ல் தொலைத்தொடர்புத் துறையில் உள்ள ஏழு சங்கங்கள் ஒன்றாக இணைந்து BSNL ஊழியர் சங்கத்தை உருவாக்கினர். அப்படி உருவாக்கப்பட்ட சங்கத்தின் புரவலராக தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் மோனிபோஸ் சில காலம் அதில் செயல்பட்டார்.

மேற்கு வங்க அரசு, அதன் அரசு ஊழியர்களுக்கு ஊதியக் குழு நியமித்த போது ஊதியக் குழுவின் உறுப்பினராக செயல்பட்டார். மேற்கு வங்கத்தின் மிக பலம் வாய்ந்த தொழிற்சங்க கூட்டமைப்பான 12th July Committeeயுடன் மிக நெருக்கமாக செயல் பட்டவர் தோழர் மோனிபோஸ். நமது சங்கம் மட்டுமல்ல, அனைத்து பகுதி தோழர்களும் அவரது அறிவுரைகளை மிகவும் பொக்கிஷமாக கருதினார்கள் என்றால் அது மிகையாகாது.

அவரது துணைவியார் தோழர் ஜோட்ஸ்னா போஸ் அவர்களும் தபால் தந்தி இலாக்காவில் பணியாற்றியவர். அவரும் மிகிச் சிறந்த தொழிற்சங்க வாதி. அவருக்கு Dr.கவுதம் போஸ் என்ற மகனும், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினரும் முன்னால் பாராளுமன்ற உறுப்பினருமான தோழர் நிலோத்மல் பாசு அவர்களின் மனைவியரான சுஸ்மிதா பாசு என்கிற மகளும் உள்ளனர்.

தபால் தந்தி இயக்கத்தின் மிக மூத்த தலைவர்களில் ஒருவரான தோழர் மோனி போஸின் மறைவு ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும். அறுபத்தைந்து ஆண்டு காலம் இந்த இயக்கத்திற்காக ஓயாது உழைத்த அந்த தோழரின் மறைவிற்கு தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் தனது கொடி தாழ்த்தி அஞ்சலியை உரித்தாக்குகிறது. அவருக்கு அஞ்சலியை உரித்தாக்கும் வகையில் தமிழ் மாநிலத்தில் உள்ள அனைத்து கிளைகளிலும் நமது சங்கக் கொடியை மூன்று நாட்கள் அரைக்கம்பத்தில் பறக்க விட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

தோழமையுடன்,<br>
**S.செல்லப்பா,**<br>
**மாநிலச் செயலர்.**